# தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை.

## க.பொ.த.(உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

## புள்ளியிடும் திட்டம்

## நாடகமும் அரங்கியலும் 58

நாடகமும் அரங்கியலும் பாடநெறியானது
வினாப்பத்திரம் –I, வினாப்பத்திரம் –II என இரு பத்திரங்களை உள்ளடக்கியது.
பகுதி I 40 பல்தேர்வு வினாக்களையும் பகுதி II 06 வினாக்களையும் கொண்டுள்ளது.
பகுதி I 40 வினாக்களும் கட்டாய வினாக்களாகும்.
ஒவ்வொரு வினாக்களுக்கும் 5 விடைகள் காணப்படும்.
அவற்றுள் சரியான ஒரு விடையைத் தெரிவு செய்து இலக்கத்தை அடைப்புக் குறியினுள் இட வேண்டும்.

**வினாப்பத்திரம் -I**

பகுதி – I 40 பல்தேர்வு வினாக்களுக்கும் **40 புள்ளிகள்**

பகுதி – II 06 வினாக்களையுடையது.
A, B என இரு பிரிவுகளை உடையது.
பிரிவு A இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

பிரிவு B இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

**வினாப்பத்திரம் - II**

பகுதி – 1 40 பல்தேர்வு வினாக்களுக்கும் 40 புள்ளிகள்

பகுதி – 11 06 வினாக்களையுடையது.
A, B என இரு பிரிவுகளை உடையது.
பிரிவு A இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்
பிரிவு B இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

| | |
|---|---|
| பகுதி – I பல்தேர்வு வினாக்கள் | 40 புள்ளிகள். |
| பகுதி – II | |
| பிரிவு A | 30 புள்ளிகள் |
| பிரிவு B | 30 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

# வினாப்பத்திரம் - II

பகுதி - I பல்தேர்வு வினாக்கள் 40 புள்ளிகள்.

பகுதி - II

| | |
|---|---|
| பிரிவு A | 30 புள்ளிகள் |
| பிரிவு B | 30 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

இறுதிப்புள்ளி

| | |
|---|---|
| வினாப்பத்திரம் -1 | 100 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் -11 | 100 புள்ளிகள் |

இரு வினாப்பத்திரங்களின் புள்ளிகளையும் கூட்டி இரண்டால் வகுத்துப் பெறப்படும் புள்ளிகள் இறுதிப் புள்ளிகளாகும். 200/2 = 100 புள்ளிகள்

# விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..........................................................................................
..........................................................................................
..........................................................................................  ✓  $\frac{4}{5}$

(ii) ..........................................................................................
..........................................................................................
..........................................................................................  ✓  $\frac{3}{5}$

(iii) ..........................................................................................
..........................................................................................
..........................................................................................  ✓  $\frac{3}{5}$

(03)  (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

**58 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
* இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

1. "ஓர் உணர்வினை அல்லது பெறுமானத்தினை வெளிப்படுத்துவதிலும் தொடர்புபடுத்துவதிலும் மனிதத்திறன் தொழிற்படும் முறையே கலை" எனக் குறிப்பிட்டவர்
(1) ஹேகல் (2) அரவிந்தர் (3) இராசமாணிக்கனார்
(4) ஜொனிக்மன் (5) இராதாகமல் முகர்ஜி (......)

2. கலை பற்றிய குரோசே கோட்பாடு
(1) புலக்காட்சிப் பொருளே கலை
(2) கலை என்பது ஒரு புனிதமான பொய்
(3) தூய உள்ளுணர்வின் வெளிப்பாடே கலை
(4) கலை என்பது ஒரு செய்முறை
(5) அழகைக் கண்டுபிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதுமே கலை (......)

3. பின்வருவனவற்றுள் பாடலே அரங்காகக் காணப்படுவது
(1) நடன நாடகம் (2) பலே (3) இசை நாடகம்
(4) வில்லுப்பாட்டு (5) கதாகாலட்சேபம் (......)

4. பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலைகளின் இயல்பு **அல்லாதது**
(1) உணர்ச்சிகள் பரிமாறப்படுவது
(2) உறவுகள் தொடர்ச்சியாகப் பேணப்படுவது
(3) உணர்வுகளை தட்டியெழுப்புவது
(4) தொழில்நுட்பத்தில் அதிகம் தங்கி நிற்பது
(5) பார்ப்போரை பங்குகொள்ள வைப்பது (......)

5. மேல்வருவனவற்றுள் வானொலி நாடகத்திற்கும் மேடை நாடகத்திற்கும் இடையில் காணப்படும் ஒற்றுமை இயல்பு **அல்லாதது**
(1) மனித முரண்கள் சித்திரித்தல்
(2) பாத்திரங்கள் மூலம் கதை நகர்த்தப்படுதல்
(3) உரையாடல் மூலமான விடய வெளிப்பாடு காணப்படுதல்
(4) மனம் எனும் அரங்கில் நிகழ்தல்
(5) எழுத்து வடிவக் கட்டமைப்பு காணப்படுதல் (......)

6. மேல்வருவனவற்றுள் நாவலுக்கும் சிறுகதைக்குமிடையே காணப்படும் வேறுபட்ட இயல்பு
(1) இரண்டையும் நாடகமாக்க முடியும்.
(2) தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சம், முடிவு என்பன காணப்படும்.
(3) கதை சொல்பவரால் படர்க்கையிலே நகரும் பண்பு பெரும் போக்காகக் காணப்படும்.
(4) சம்பவங்கள், சூழல்கள் என்பன அதிக கற்பனைக்கு இடமின்றி வர்ணிக்கப்படும்.
(5) புனைகதை வடிவங்களாகக் காணப்படும். (......)

7. "கதை தழுவி வரும் கூத்தே நாடகம்" எனக் குறிப்பிட்டவர்
(1) இளம்பூரணர் (2) அபிநவகுப்தர் (3) அடியார்க்கு நல்லார்
(4) தொல்காப்பியர் (5) பரிமேலழகர் (......)

8. "கிரேக்க கோரசின் தலைவன் கிப்போகிறைட் (Hipokrite) என அழைக்கப்பட்டான்." 'கிப்போகிறைட்' என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள்
(1) போலச் செய்பவன் (2) பாசாங்கு செய்பவன் (3) பதில் சொல்பவன்
(4) கற்பனை செய்பவன் (5) வியாக்கியானம் செய்பவன் (......)

9. அரங்குடன் தொடர்புடைய மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக.
அ - அரங்கவெளி மலைப்பகுதியாக இருக்கும்.
ஆ - வட்ட வடிவில் ஆடுகளம் காணப்படும்.
இ - அரங்கைச் சுற்றிவரப் பார்ப்போர் இருந்து பார்ப்பர்.
ஈ - அரங்கு குதிரைக் குளம்பு வடிவமானது.
உ - 500 தொடக்கம் 1000 பேர் வரை இருந்து பார்க்கக்கூடியது.
இவற்றுள் கிரேக்க அரங்குடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, ஈ (3) அ, ஆ, உ
(4) அ, ஈ, உ (5) ஆ, இ, உ (......)

10. 'கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு' எனும் நூலின் ஆசிரியர்
(1) அ. மணவாளன் (2) ம. சண்முகலிங்கம் (3) கோகிலா மகேந்திரன்
(4) அஸ்வகோஷ் (5) கா. சிவத்தம்பி (......)

11. மேல்வருவனவற்றுள் பழைய மகிழ்நெறி நாடக மரபுக்குரிய பண்பு யாது?
(1) மத்தியதர வர்க்கத்தினரின் அன்றாட வாழ்வு பேசப்படுதல்
(2) கற்பனைகள் மறைக்கப்பட்டு யதார்த்தப் பண்பு நிறைந்த மொழியில் பேசுதல்
(3) நகர்சார் சமூக விடயங்களை கற்பித்த முன்னெடுப்புடன் கையாளுதல்
(4) அரசியல் கொள்கைகளையும் அரசியல்வாதிகளையும் விமர்சித்தல்
(5) ஆழமான கேலி, கிண்டல் இல்லாதிருத்தல் (......)

12. "இசையின் விளையும் இன்பம் அவை நாடகத்தால் விளையும் துணையின்பங்களுள் சிறந்தது" எனக் குறிப்பிட்டவர்
(1) தெஸ்பிஸ் (2) சோபோகிளிஸ் (3) அரிஸ்டோட்டல்
(4) சேக்ஸ்பியர் (5) இப்சன் (......)

13. மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக.

அ - வாழ்வை இலட்சிய நோக்கில் பார்த்தல்
ஆ - உணர்ச்சி சார்ந்த இன்ப முடிவு காணப்படுதல்
இ - வேட உடை, ஒப்பனை என்பன இயல்பானதாகக் காட்டப்படுதல்
ஈ - கவர்ச்சிகரமான உரையாடலுக்கு முதன்மையளித்தல்
உ - கற்பனைத் தன்மை சார்ந்த காதல், வீரம் போன்றன முன்னிலைப்படுதல்

மேற்குறிப்பிட்டவற்றுள் கற்பிதவாத நாடக மரபுடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?

(1) அ, ஆ, ஈ (2) அ, இ, ஈ (3) அ, இ, உ
(4) அ, ஈ, உ (5) ஆ, இ, ஈ (......)

14. மேல்வருவோருள் மிகைப்பாட்டுவாத நாடக ஆசிரியர் **அல்லாதவர்**

(1) ஷில்லர்
(2) அல்பிரட் விக்னி
(3) அல்பிரட் டி முஸெற்
(4) விக்டர் ஹியூகோ
(5) [illegible] (......)

15. சமஸ்கிருத அரங்கில் 'செவ்வக அரங்கு' என்பதைக் குறிப்பது

(1) திரியஸ்ர அரங்கு (2) விக்கிருஷ்ட அரங்கு (3) சதுரஸ்ர அரங்கு
(4) அவர அரங்கு (5) ஜேஷ்ட அரங்கு (......)

16. வடமொழி நாடகக் கட்டமைப்பில் "நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நம்பிக்கை உண்டாதல்" என்பதைக் குறிப்பது

(1) ஆரம்ப (2) பிரயத்ன (3) பிராப்தியாச
(4) நியதாப்தி (5) பலாகம (......)

17. மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக.

அ - சந்தித்துரைப்பு முறைமையின் அறிமுகம்
ஆ - அரங்கை ஓர் இயந்திர இயக்கமாக்குதல்
இ - படச்சட்ட அரங்கின் எல்லைகளுக்குள் நிற்றல்
ஈ - உள்ளதை உள்ளவாறு சித்திரித்தல்
உ - காட்சித்திரைகளின் நீக்கம்

மேற்குறிப்பிட்டவற்றுள் யதார்த்த விரோத அரங்கின் சிந்தனைகளைக் கொண்ட தொகுதி யாது?

(1) அ, ஆ, இ (2) அ, ஆ, உ (3) அ, ஈ, உ
(4) ஆ, இ, ஈ (5) ஆ, இ, உ (......)

18. சமஸ்கிருத நாடகத்தில் கதைத் தலைவன் / கதைத் தலைவியின் பெயரைக் கொண்ட நாடகம் **அல்லாதது**

(1) ஸ்வப்ன வாசவ தத்தம் (2) அபிஞ்ஞான சாகுந்தலம் (3) இரத்னாவளி
(4) மாலதிமாதவம் (5) மிருச்சகடிகம் (......)

19. 'எந்தையும் தாயும்' நாடகத்தின் பிரதான மோதுகை

(1) சொந்த நாட்டில் துயருறும் பிள்ளைகள் பற்றிய சோகம்
(2) பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு துயருறும் பெற்றோர்
(3) வெளிநாடுகளில் பிள்ளைகள் அனுபவிக்கும் துன்பங்கள்
(4) பிள்ளைகளுடன் சந்தோசமாக இருக்கும் பெற்றோர்
(5) வெளிநாடு செல்ல முடியாது இருக்கும் இளைஞர்களின் விரக்தி (......)

20 'ஆச்சிரமத்தில் வண்டு துரத்தும்போது அச்சமடைந்து ஓடும் சகுந்தலையைக்' கண்டு பார்வையாளர் மனதில் தோன்றும் ரசம்

(1) ஹாஸ்ய (2) ரௌத்திர (3) பயானக
(4) கருணா (5) பீபத்ச (......)

**21.** மேல்வரும் வடிவங்களுள் உடலை முதன்மைப்படுத்துவன
(1) பரதம், கதகளி (2) வாசகப்பா, நடனம் (3) ஊமம், இசைநாடகம்
(4) கூத்து, இசைநாடகம் (5) ஒபேரா, வில்லுப்பாட்டு (......)

**22.** சமஸ்கிருத நடிப்புப் பாணிகளில் நாட்டியதர்மி பற்றிய கூற்று யாது?
(1) லலித அங்க அசைவுகள் அற்றது.
(2) உலக மக்களின் இருப்பை சித்திரிப்பது.
(3) இயல்பான அபிநயங்களை வெளிப்படுத்துவது.
(4) கற்பனை மிக்க விரும்பத்தகும் நிகழ்ச்சிகளைக் கொண்டது.
(5) அரங்கப் பொருட்களை பெருமளவில் பயன்படுத்துவது. (......)

**23.** பார்ப்போருக்கு அரங்கில் கட்புலத் தாக்கத்தை ஏற்படுத்தும் துணைக்கலைகள் யாவை?
(1) காட்சி, சத்தம் (2) இசை, ஒப்பனை (3) குரல், உடலசைவு
(4) ஒளி, வேட உடை (5) இசை, குரல் (......)

**24.** "சடங்கு என்பது கூட ஒரு நடைமுறைதான், ஆனால், அது உழைப்புப் போக்கிலிருந்து வேறுபட்டது" எனக் குறிப்பிட்டவர்
(1) நீட்சே (2) ஜேன் ஹரிசன் (3) ஜே. ஜே. தொம்சன்
(4) பக்தவத்சல பாரதி (5) ஹென்றி புரொக்கேடு (......)

**25.** மேல்வருவனவற்றுள் கலையரசு சொர்ணலிங்கம் தொடர்பான தவறான கூற்று எது?
(1) 'நாடகமும் நானும்' என்பது ஈழத்தில் அவரால் எழுதப்பட்ட நூலாகும்.
(2) நாடகங்களை தானே எழுதி நடித்தார்.
(3) ஒதெல்லோ, மனோகரா, வாணிபுர வணிகன் போன்ற பல நாடகங்களைத் தயாரித்தார்.
(4) கம்சன், ஷைலொக் போன்றன அவர் நடித்த சிறந்த பாத்திரங்களாகும்.
(5) நடிகர், நெறியாளர், தயாரிப்பாளர் எனப் பல தகைமைகளைக் கொண்டவராகத் திகழ்ந்தார். (......)

**26.** பெண்கள் விளையாடும் இடமாகவும் ஆடல் நிகழ்வுகளை வழங்கும் இடமாகவும் தொல்காப்பியர் குறிப்பிடுவது
(1) ஆடுகளம் (2) பண்ணை (3) தளிச்சேரி
(4) கூத்தம்பலம் (5) நாடகசாலை (......)

**27.** மேல்வருவனவற்றுள் போர்க்காலத்தில் நிகழ்த்தப்பட்ட தமிழக சடங்காட்ட முறைமை
(1) வேலன் வெறியாடல் (2) தை நீராடல் (3) வாடாவள்ளி
(4) களவேள்வி (5) ஆய்ச்சியர் குரவை (......)

**28.** மேல்வருவோருள் சோழர் பல்லவர் காலத்தில் அரச சபைகளிலும் கோயில்களிலும் நடனமாடிய பெண்கள் அல்லாதோர்
(1) பதியிலார் (2) மாணிக்கத்தார்
(3) சதுரிமாணிக்கம் (4) கோயிற் பிணாப் பெண்டுகள்
(5) விறலியர் (......)

**29.** சிவன் மன்மதனை எரித்த கதை நிகழ்த்தப்படும் கூத்து வடிவம்
(1) அருச்சுனன் தபசு (2) பொன்னர் சங்கர் (3) காமன் கூத்து
(4) வீரபத்திரர் ஆட்டம் (5) காவடி ஆட்டம் (......)

**30.** மேல்வருவனவற்றுள் கோவலன் கூத்துக்குரிய அம்சம் அல்லாதது யாது?
(1) தாளக்கட்டுக்கள் பயன்படுத்தப்படுவதில்லை.
(2) அரங்கவெளியாக வட்டக்களரி காணப்படும்.
(3) வசந்தப்பத்தன் ஆட்டம் பிரசித்தியமானது.
(4) ஆட்டக்கூத்து எனவும் அழைக்கப்படும்.
(5) வில்லுறுப்பு அணியப்படும். (......)

**31.** இசை நாடகப் பாடல்களைப் பாடும்போது மோகன ராகத்தினூடாக வெளிப்படும் உணர்வு
(1) சோகம் (2) கோபம் (3) வீரம்
(4) தாலாட்டு (5) மகிழ்ச்சி (.......)


**32.** பறைமேளக் கூத்தில் பயன்படும் வாத்தியங்கள்
(1) பெரும் பறை, சிறுபறை (2) பறை, தம்பட்டம் (3) பறை, சொர்ணாளி
(4) மத்தளம், சல்லரி (5) பறை, உடுக்கு (.......)

**33.** பின்வருவனவற்றுள் சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் பாத்திரங்களை வர்ணிக்கும் பாடல்
(1) பாத பங்கயம் பணிந்தேன்... (2) கண்ணிழந்து ஊடலானோம்...
(3) திவ்விய புருஷன் நீ பார்!... (4) வாரான் ஒருவன் யாவே...
(5) சோலை அழகை... (.......)

**34.** சமஸ்கிருத அரங்கில் வைசியர் அமர வேண்டிய திசையும் தூணின் நிறமும்
(1) தென்கிழக்கு மூலை - வெள்ளைத்தூண்
(2) தென்மேற்கு மூலை - சிவப்புத்தூண்
(3) வடமேற்கு மூலை - மஞ்சள்தூண்
(4) வடகிழக்கு மூலை - கறுப்புத்தூண்
(5) தென்கிழக்கு மூலை - சிவப்புத்தூண் (.......)

**35.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
அ - இயற்பண்பு வாதத்தின் முதலாவது நாடகாசிரியர் ஆவார்.
ஆ - நடிகர் நாடகம் ஆடாது பார்வையாளர் முன்னிலையில் வாழவேண்டும்.
இ - அறிவியல் வாதத்தைப் பயன்படுத்தினார்.
ஈ - பிரச்சினை நாடகங்கள் என அழைக்கப்பட்டன.
உ - Therese Raquin இவரது நன்கு அறியப்பட்ட நாடகமாகும்.
இவற்றுள் எமிலிசோலாவுடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, உ (3) ஆ, இ, ஈ
(4) ஆ, ஈ, உ (5) இ, ஈ, உ (.......)

**36.** படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் எழுதப்பட்ட நாடகம் யாது?



(1) ஒரு பாவையின் வீடு (A doll's house)
(2) சம்பந்தம் (Proposal)
(3) கடவுளுக்காகக் காத்திருத்தல் (Waiting for God)
(4) வெண்கட்டி வட்டம் (Chalk circle)
(5) செரிப்பழத் தோட்டம் (Cherry orchard) (.......)

**37.** படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் முன்வைக்கப்பட்ட அரங்கு யாது?



(1) சடங்கு அரங்கு
(2) வறுமை அரங்கு
(3) ஒளிந்து தாக்கும் அரங்கு
(4) குரூர அரங்கு
(5) விவாதக்கள அரங்கு (.......)


38. படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கு,



(1) கிரேக்கத்திற்குரியது
(2) ரோமிற்குரியது
(3) மத்திய காலத்திற்குரியது
(4) எலிசபெத் காலத்திற்குரியது
(5) மறுமலர்ச்சிக் காலத்திற்குரியது

(......)


39. படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் எழுதப்பட்ட நூல் யாது?



(1) கவிதைக்கலை
(2) கவிதையியல்
(3) நாட்டிய சாஸ்திரம்
(4) பரதக்கலை
(5) மகா காவியம்

(......)

40. படத்தில் காட்டப்பட்டுள்ள நடிகர் மேல்வரும் எந்த நாடக வகைக்குரியவர்?



(1) இத்தாலிய பலே
(2) ஜப்பானிய நோ
(3) பாலி நூத்துருக
(4) மலேசிய மயாங்
(5) சீன ஒபேரா

(......)

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

විෂය අංකය / பாட இலக்கம்: **58** විෂයය / பாடம்: **நாடகமும் அரங்கியலும் I**

ලකුණු දීමේ පටිපාටිය / **புள்ளி வழங்கும் திட்டம்**
I පත්‍රය / **பத்திரம் I**

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 4 | 21. | 1 | 31. | 1 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 4 | 32. | 3 |
| 03. | 3 | 13. | 4 | 23. | 4 | 33. | 4 |
| 04. | 4 | 14. | 1 | 24. | 3 | 34. | 3 |
| 05. | 4 | 15. | 2 | 25. | 2 | 35. | 2 |
| 06. | 4 | 16. | 3 | 26. | 2 | 36. | 3 |
| 07. | 3 | 17. | 2 | 27. | 4 | 37. | 5 |
| 08. | 2 | 18. | 5 | 28. | 5 | 38. | 4 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 3 | 39. | 2 |

✪ විශේෂ උපදෙස් / **விசேட அறிவுறுத்தல் :**

එක් පිළිතුරකට / **ஒரு சரியான விடைக்கு** 01 ලකුණු බැගින් / **புள்ளி வீதம்**

මුළු ලකුණු / **மொத்தப் புள்ளிகள்** 1 x 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

**58 T I**

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

1. (i) நாடகக் கலையின் தனித்துவமான பண்புகளை எடுத்துக்காட்டுக. (05 புள்ளிகள்)
(ii) துணைக்கலைகளை தொழில்நுட்பத்துடன் இணைத்துக் கையாளும்போது நாடகம் வலிமைபெறும் என்பதை ஏற்றுக்கொள்வீரா? விளக்குக. (10 புள்ளிகள்)

2. (i) வடமொழி நாடகத்தின் கட்டமைப்பைச் சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)
(ii) லோக தர்மி, நாட்டிய தர்மி ஆகிய நடிப்புப் பாணிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

3. யப்பானிய கபுக்கி (Kabuki) அரங்கு மற்றும் கிரேக்க அரீனா (Arena) அரங்கு என்பவற்றில் பின்வருவன அமையுமாற்றை விளக்குக.
(i) ஆற்றுகை வெளி
(ii) ஆற்றுகை முறைமை
(iii) பார்வையாளர் துலங்கல் (5 × 3 = 15 புள்ளிகள்)

### உபபகுதி B

4. இப்சனின் 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு 'யதார்த்தவாதம்' என்பதனை விளக்குக. (15 புள்ளிகள்)

5. பின்வரும் அரங்க முறைமைகள் பற்றி விவரிக்குக.
(i) குரூர அரங்கு (Theatre of Cruelty)
(ii) விவாதக்கள அரங்கு (Forum Theatre)
(iii) சூழலியல் அரங்கு (Environmental Theatre) (5 × 3 = 15 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
(i) விறலியர்
(ii) மாதவி
(iii) கட்டியக்காரன்
(iv) விதூஷகன்
(v) பபூன் (5 × 3 = 15 புள்ளிகள்)

※ ※ ※

# பகுதி II
## உப பகுதி A

01.

i. **நாடகக் கலையின் தனித்துவமான பண்புகளை எடுத்துக்காட்டுக.**

- ஆற்றுகைக் கலையில் ஒன்றாகத் திகழ்கின்றது.
- கால, வெளிக் கலையாக இருத்தல்.
- கட்புல, செவிப்புல அசைவியக்க வெளிப்பாடு கொண்ட கலை.
- அசைவும், வெளியும் கொண்ட கலை
- பார்வையாளர், அரங்க வெளி, நடிகர் மூன்றையும் ஒன்றிணைக்கும் கலை.
- அழகியல் வெளிப்பாட்டையும் பார்ப்போருக்கு மகிழ்வினையும் தந்து சிந்தனையையும் தூண்டும் கலை.
- கணப்பிரசன்னமான கலை

இவைபோன்ற விடைகள் எதிர்பார்க்கப்படும்.

**(05 புள்ளிகள்)**

ii. **துணைக்கலைகளை தொழிநுட்பத்துடன் இணைத்துக் கையாளும் போது நாடகம் வலிமையுறும் என்பதை ஏற்றுக்கொள்வீரா? விளக்குக.**

ஆம்

- இங்கு நாடகத்திற்குத் துணை நிற்கும் தொழிநுட்பங்களாக, இசை, ஒளி, ஒலி, வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு என்பவற்றை இனங்கண்டு, அத் தொழிநுட்பங்களால் துணைக்கலைகள் வலிமையுறும்.

சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டி விடை எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கப்படலாம்.

**(5 x 2 = 10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**02.**

i. **வடமொழி நாடகத்தின் கட்டமைப்பைச் சுருக்கமாக விவரிக்குக.**

- வடமொழி நாடகக் கட்டமைப்பின் ஆரம்ப, பிரயத்தன, பிரத்தியாச, நியதாப்தி, பலாகம என்பவற்றைக் கூறி விளக்கியிருத்தல்.
- ஆரம்ப – நாடக செயலின் நோக்கம்

  பிரயத்தன – விரும்பிய அப்பொருளை அடையக் கதாநாயகன் முயலுதல்.

  பிரத்தியாச – நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நம்பிக்கை உண்டாதல். இது அனுகூலமானதாக அன்றேல் பிரதிகூலமானதாக அமையும்.

  நியதாப்தி – எதிர்ப்படும் துன்பங்களை நீக்குவதால் குறிக்கோள் நிறைவேறும் என்ற துணிவு பிறத்தல்.

  பலாகம – நோக்கம் நிறைவேறிப் பலனடைதல்.

ஐந்தையும் கூறி விளக்கியிருப்பின் **(05 புள்ளிகள்)**

ii. **லோக தர்மி, நாட்டிய தர்மி ஆகிய நடிப்புப் பாணிகளை விளக்குக.**

**லோக தர்மி**

- உலக நடைமுறை சார்ந்தது.
- உலக இயற்கையைப் பின்பற்றி வருவது.
- நடைமுறை வாழ்வை ஒத்திருப்பது.
- பாத்திரங்களின் இயல்பான நடத்தையைக் காட்டுவது.
- போலித்தனம் அற்றது.
- லலித அங்க அசைவுகள் அற்றது.

**நாட்டிய தர்மி**

- கவி தன் அனுபவத்தால் சூழலில் பெற்றுக் கொண்டவை, கேட்டறிந்தவை, பார்த்த விடயங்களை அறிவாற்றலால் கற்பனை செய்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருத்தல்
- நாட்டிய சாஸ்திர மரபுக்கு உட்பட்டதாகி அமைந்திருத்தல்.
- மெருகுபெற்ற அசைவுகள், அபிநயங்களைக் கொண்டிருத்தல்.
- உரையாடல், நடிப்பு, பாவங்கள், உணர்ச்சிகள், லலிதம் கலந்திருத்தல்.

இரண்டு தர்மிகளும் உதாரணங்களுடன் விளக்கப்பட்டிருப்பின்

**(05 x 02 = 10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**03. யப்பானிய கபுக்கி** (Kabuki) **அரங்கு மற்றும் கிரேக்க அரீனா** (Arena) **அரங்கு என்பவற்றில் மேல்வருவன அமையுமாற்றை விளக்குக.**

i. **ஆற்றுகை வெளி**

- கிரேக்க, கபுக்கி அரங்க வெளியின் அமைப்பைக் குறிப்பிடுதல்.
- ஆற்றுகை வெளியின் படம் வரைந்து விளக்குதல்.

**(05 புள்ளிகள்)**

ii. **ஆற்றுகை முறைமை**

- இவ்விரு அரங்குகளும் அரங்க வெளிகளை ஆற்றுகைக்காக எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதை விளக்குதல்.
- ஆற்றுகை மோடி, துணைக் கலைகளைப் பயன்படுத்தும் முறைமை என்பவற்றை விளக்குதல்.

**(05 புள்ளிகள்)**

iii. **பார்வையாளர் துலங்கல்**

- கிரேக்க அரங்கின் பார்வையாளர் துலங்கலை கதாசிஸ் என்பதன் அடியாக விளக்குதல். கபுக்கி அரங்கினை யூஜின் என்பதன் அடியாக விளக்குதல்.
- பார்வையாளர்களுக்கு ஏற்ப; இவ்விரு அரங்குகளும் ஆற்றுகை முறைமையில் மாற்றமடையும் தன்மையை விளக்குதல்.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

## உப பகுதி B

**04. இப்சனின் 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு 'யதார்த்தவாதம்' என்பதை விளக்குக.**

- யதார்த்த வாதம் என்பதன் விளக்கத்தைக் குறிப்பிடல்.
- பாத்திரங்கள் தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்படல். யதார்த்தப் பண்புடன் பொருத்திப் பார்த்தல்.
- மோதுகை – ஆண், பெண் சமூகத்தினருக்கிடையிலான முரண்பாடு. ( யதார்த்த வாழ்வியலுடனான தொடர்பு)
- கதைப்பின்னல் – நன்கமைந்த கட்டமைப்பு – ஆரம்பம் – வளர்ச்சி – உச்சம் – சிக்கல் அவிழ்ப்பு – முடிவு எனும் காரணக் காரியத் தொடர்புடன் பின்னப்படுதலை எழுத்துருவிலிருந்து உதாரணங்களுடன் விளக்கியிருத்தல். (நாடக செயலியக்கம், நாடக செயல்கள் தொடர்பானவை)
- சொல்லாடல் பாங்கு – யதார்த்தப் பாங்குடன் குறியீட்டுப் பண்பும் கலந்திருப்பது.
  உதாரணம் : எனது வினோத உடைகளைக் கலைக்கிறேன்.
- கரு – இல்லற வாழ்வில் நிலவும் புரிந்துணர்வின்மை – ஹெல்மர் மற்றும் நோறாவின் சிந்தனைப் போக்கிற்கு இடையிலான புரிந்துணர்வின்மை.
- காட்சிப் பொருள்கள் / காண்பியங்கள் தொடர்பானவை
  உதாரணம் : நத்தார் மரத்தை மறைத்து வைத்தல், ஆடுகதிரை – நோறாவின் வாழ்வு ஆட்டம் காணப்போவதைக் குறிப்பது.
- மோடி
- கதை

மேற்படி ஒவ்வொரு பண்புகளும் 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்களுடன் விளக்கியிருத்தல்.

**(15 புள்ளிகள்)**

**05. பின்வரும் அரங்க முறைமைகள் பற்றி விளக்குக.**

i. **குரூர அரங்கு** (Theatre of Cruelty)

- அன்ரொனின் ஆட்டுவாட்டின் பரிசோதனை அரங்கு ஆகும்.
- நவவேட்கைவாத அரங்க முறைமைக்குள் உட்படுத்தப்பட்டது.
- மனிதனின் ஆழ்மன உணர்வுகளை வெளிக்கொணரும் நடிப்பு முறை.
- நோய் தீர்க்கும் அரங்க முறையாக அமைந்தமை.
- சொற்களுக்குப் பதிலாக மெய்ப்பாடுகள், படிமங்கள், வினோத ஒலிகள், அதிர்ச்சியூட்டும் ஒளி விளைவுகள் என்பவற்றைப் பயன்படுத்திப் பார்ப்போரைத் திடுக்குறச் செய்தல்.
- குறியீட்டுத் தன்மையான பாத்திரப் பயன்பாடு.
- பார்ப்போருக்கும் அரங்க வெளிக்கும் இடையிலிருக்கின்ற தடைகளை இந்த அரங்கு தகர்த்தது.

இவற்றை மையப்படுத்தி யாதாயினும் மூன்று அம்சங்களைக் குறிப்பிட்டிருப்பின்

**(05 புள்ளிகள்)**

ii. **விவாதக்கள அரங்கு** (Forum Theatre)

- ஒகஸ்தா போலின் அரங்கு
- ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க உத்திகள் கையாளப்பட்டன.
- பார்ப்போர் ஆற்றுகையில் தலையிடவும் விவாதிக்கவும் வளர்த்துச் செல்லவும் அனுமதிக்கப்பட்டனர்.
- ஆற்றுவோர் – பார்ப்போருக்கு இடையில் இருந்த தடைகள் அகற்றப்பட்டன.
- பார்ப்போர் தமது சொந்தத் தீர்வுகளை முன்வைக்கவும் ஆற்றுகையில் பங்கெடுக்கவும் இடமளிக்கப்பட்டனர்.

இவற்றை மையப்படுத்தி யாதாயினும் மூன்று அம்சங்களைக் குறிப்பிட்டிருப்பின்

**(05 புள்ளிகள்)**

iii. **சூழலியல் அரங்கு** (Environmental Theatre)

- ஆற்றுவோரும் பார்ப்போரும் தளர் நிலையிலும் சுயாதீனமாகவும் பங்கு கொள்ளும் தன்மை.
- பெரிய வெளி சார்ந்த ஆற்றுகை. இதற்கு ராம்லீலா அரங்க முறைமை பயன்படுத்தப்பட்டது.
- இங்கு ஆற்றுவோரும் பார்ப்போரும் அருகருகே செயற்பட்டனர்.

- டயோனிசஸ், மக்பெத் போன்றவை சூழலியல் அரங்க முறைகளைப் பயன்படுத்தி நிகழ்த்தப்பட்டுள்ளன.
- மகிழ்வளிப்புத் தன்மை காணப்பட்டுள்ளது.

இவற்றை மையப்படுத்தி யாதாயினும் மூன்று அம்சங்களைக் குறிப்பிட்டிருப்பின்

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**06. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

i. **விறலியர்**

- விறலி என்பவள் "பாண் மகள்" எனவும் அழைக்கப்படுகின்றாள். (சங்க இலக்கிய பெண் ஆற்றுகைக் கலைஞர்)
- விறல் என்பது "திறன்" எனப் பொருள்படும். அதாவது பாட்டுப் பாடி; பண் இசைக்கேற்றவாறு ஆடும் திறன் உடையவர்களே விறலியர் ஆவர்.
- பாட்டின் பொருள் புலப்படும் படி உடல் உறுப்புக்களை அசைத்துக் காட்டுபவள். இவர்கள் இவ்வாறு காட்டுவதற்கு விறல் என்று பெயர்.
- எல்லாக் கூத்தர் குழாம்களிலும் இவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.
- "மலைபடுகடாம்" என்ற நூலை "விருத்தராற்றுப்படை" என்பர். அதில் தொன்று தொட்டு வரும் மரபுப்படி முதலில் கடவுளை வாழ்த்திப் பாடி ஆடுவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சங்ககால விறலியரின் தொடர்ச்சி பிற்காலத்தில் பெண் ஆளுமைகளைத் தோற்றுவித்தமை.

இவை போன்ற விடைகள் காணப்படின் **(05 புள்ளிகள்)**

ii. **மாதவி**

- நாட்டிய நன்னூல் கடைபிடித்து இரு திறமும் (வேத்தியல், பொதுவியல்) தெரிந்து ஆடுபவள்.
- பிரபுக்களை மகிழ்வூட்டத்தக்க வகையில் பதினொரு ஆடல்களையும் ஆடி முடிக்கின்றாள்.
- நியம அரங்க விதிகளை விளங்கி, பாடலாசிரியன், குழலாசிரியின், தண்ணுமை ஆசிரியன் போன்றோரின் இசைக்கேற்பத் தாளம், கொட்டு, கூத்து என ஆடி முடிக்கின்றாள்.
- செந்நெறி அரங்கும், ஆற்றுகை முறைமையும் மாதவியிலிருந்து மெருகூட்டப்படுகின்றது.
- ஆடல், பாடல், அழகு புலப்பட ஆடியமையால் தலைக் கோலிப் பட்டம் பெற்ற பெண்பாற் கலைஞர் ஆவாள்.

இவை போன்ற விடைகளைக் காண்பின் **(05 புள்ளிகள்)**

iii. **கட்டியகாரன்**

- கூத்துக்களிலும், தெருக்கூத்துகளிலும் நாடகக் கதையைக் கட்டி ஆள்பவன்.
- பொதுவாக, கூத்தின் அரசர் வரவினை அறிவிக்க வருபவரே கட்டியகாரன் ஆவான்.
- பலவேறு பாத்திரங்களாகவும் செயற்படுபவன்.
- சில கூத்துக்களில் ஒவ்வொரு அரசருக்கும் ஒவ்வொரு கட்டியகாரன் தோன்றிக் கட்டியம் கூறுவதும்
- ஆற்றுவோரையும் பார்ப்போரையும் கூத்துச் சூழலுக்குள் இழுத்துச் செல்பவன்.
- காட்சிப் பின்புலத்தை எடுத்துக் கூறுபவன்.

இவை போன்றவை காணப்படின்

**(05 புள்ளிகள்)**

iv. **விதூஷகன்**

- சமஸ்கிருத நாடக மரபில் வருகின்ற ஓர் விகடப் பண்புடைய பாத்திரமே “விதூஷகன்” ஆவான்.
- கதாநாயகனுக்குத் துணைப் பாத்திரமாகப் படைக்கப்படுவான்.
- வழிகாட்டுபவனாகவும் கதாநாயகனது துன்ப துயரங்களில் பங்கேற்று ஆலோசனைகள் கூறுபவனா-கவும் நாடகத்தின் முடிச்சுக்களை அவிழ்ப்பவனாகவும் காணப்படுவான்.
- இரு பொருள்படச் சிலேடை மொழிகளில் பேசி, நகைச்சுவையைத் தோற்றுவிப்பான்.
- விதூஷகன் பாத்திரம் மனதிற்கு மகிழ்ச்சியை ஊட்டுவதற்கென்றே படைக்கப்படுகின்றது.

இவை போன்ற விடைகள் காணப்படின் **(05 புள்ளிகள்)**

v. **பபூன்**

- பபூன் பாத்திரம் இசை நாடகங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளது.
- சேக்ஸ்பியர் நாடகங்களில் கோமாளிகள் போன்று இப்பாத்திரம் கேளிக்கையும், கிண்டலும் நிறைந்த பாத்திரம் ஆகும்.
- சமஸ்கிருத அரங்கில் விதூஷகன் போல் இந்திய கிராமிய நாடகங்களில் “பபூன்” பாத்திரம் காணப்பட்டுள்ளது.
- ஒரு விகட இடை நிகழ்வை நிகழ்த்துபவனாகத் தொழிற்படுபவன்.
- மிகவும் அர்த்தப் பாங்கான விடயங்களையும் கேளிக்கைகளையும் இலகுவில் கூறும் பாங்குடையவன்.

இவை போன்ற விடைகளை கருத்தில் கொள்க. **(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

**58 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

சுட்டெண் : ..........................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

※ பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

**பகுதி I**

※ எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

**1.** பார்வையாளரை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் முன்னிலையில் நிகழ்த்தப்படும் கலைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) ஆக்கும் கலைகள் (2) ஆற்றுகைக் கலைகள் (3) பயன் கலைகள)
(4) தொழில்நுட்பக் கலைகள் (5) கைவினைக் கலைகள் (......)

**2.** நாடகம் என்பது 'நட்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து பிறந்தது" எனக் குறிப்பிட்டவர்
(1) பரதர் (2) இளம்பூரணர் (3) அபிநவகுப்தர்
(4) இந்துசேகர் (5) அடியார்க்கு நல்லார் (......)

**3.** கிரேக்க அரங்கில் பயன்படுத்தப்பட்ட 'Ekky Klema' எனும் கருவி எதனைக் குறிக்கும்?
(1) தெய்வம் தருகருவி (2) முன்னோரைக் குறிப்பீட்டுக்காட்சி
(3) இறந்தோர் உடன் காவும் பொறி (4) பலிபீடம்
(5) அரண்மனை (......)

**4.** கிரேக்க திரஜெடி நாடகக் கட்டமைப்பில் சம்பவங்கள் காட்சிகளாக நிகழ்த்தப் பெறுவதைக் காட்டுவது
(1) பாயிரம் (2) பரடோஸ் (3) எபிசோடியா
(4) ஸ்ரசிமா (5) இசைப்பா முகனி (......)

**5.** பின்வரும் நாடகங்களுள் ஸ்ரீ ஹர்ஷரால் எழுதப்பெற்றது
(1) நாகா நந்தம் (2) சாகுந்தலம் (3) ஸ்வப்ன வாசவதத்த
(4) பொம்மை வண்டி (5) மாலதி மாதவம் (......)

6. 'தீப்சிற்கு எதிராக எழுவர்' எனும் கிரேக்க அவலச்சுவை நாடகத்தை எழுதியவர்
(1) எஸ்கிலஸ் (2) சொபோகிளிஸ் (3) மெனாண்டர்
(4) தெஸ்பிஸ் (5) யூரிப்பிடிஸ் (......)

7. குளிர்த்திச் சடங்கின் பிரதான நோக்கம் யாது?
(1) தாம் விரும்பிய கணவரை அடைதல் (2) கர்ப்பிணிகளைப் பாதுகாத்தல்
(3) சுகப்பிரசவம் (4) நோய் தீர்த்தல்
(5) பிசாசு ஓட்டுதல் (......)

8. சொபோகிளிசால் எழுதப்பெற்ற கிரேக்க சற்றயர் (Satyric) நாடகம்
(1) The cyclops (2) Trackers (3) The clouds
(4) The frogs (5) The birds (......)

9. உருவமற்ற கல் வழிபாடு, தேவியின் செய் இலையை எரித்த கரியை ஒப்பனைக்காகப் பயன்படுத்துதல், கடலையிலிருந்து எடுத்து வந்த மண்ணைச் சாப்பிடுதல் போன்ற செயல்கள் இடம்பெறும் சடங்கு
(1) வேட்டைத் திருவிழா (2) குளிர்த்திச் சடங்கு (3) காவடித் திருவிழா
(4) காம தகனம் (5) மாம்பழத் திருவிழா (......)

10. சோழர் காலத்தில் சிறந்த ஆடற் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட இரண்டு பட்டங்களாவன
(1) திருவாளன், நிருத்தப் பேரரையன் (2) நாடக மய்யன், விறலி
(3) திருவாளன், சதுரி மாணிக்கம் (4) நிருத்தப் பேரரையன், தலைக் கோலி
(5) நாடக மய்யன், ஆடல் வல்லான் (......)

11. பின்வருவனவற்றுள் கலித்தொகையின் அமைப்பில் இடம்பெறாத அம்சம்
(1) தரவு (2) தாழிசை (3) சுரிதகம்
(4) துரிதம் (5) தனிச்சொல் (......)

12. ஆடலையும் பாடலையும் முதன்மைப்படுத்திய போக்கிலிருந்து விலகி சொல்லாடலுக்கு முதன்மை வழங்கியவர் யார்?
(1) பாலாமணி அம்மையார் (2) சங்கரதாஸ் சுவாமிகள் (3) சங்கரப்பிள்ளை
(4) பம்மல் சம்பந்த முதலியார் (5) பெருங்கோட்டூர் பொன்னுசாமி (......)

13. 'பழையதும் புதியதும்' எனும் அரங்க நூலின் ஆசிரியர்
(1) கோகிலா மகேந்திரன் (2) அ. மங்கை (3) சி. மௌனகுரு
(4) வீ. அரசு (5) அராலியூர் சுந்தரம்பிள்ளை (......)

14. "எல்லாப் பிடாரியே எதிராக வந்தேன்
கொல்லை உடன் காவலைப் பொன்னடி..." எனும் இசை நாடகப் பாடல் இடம்பெறும் நாடகம்
(1) வள்ளியம்மை நாடகம் (2) நந்தனார் கீர்த்தனை (3) நல்ல தங்காள்
(4) சம்பூர்ண அரிச்சந்திரா (5) சத்தியவான் சாவித்திரி (......)

15. பின்வருவனவற்றுள் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட நாடகம் எது?
(1) அன்ரிகனி (2) [illegible] (3) மன்னன் லியர்
(4) ஒத்தல்லோ (5) அன்னை இட்ட தீ (......)

16. பின்வரும் உரையாடலைக் கருதுக.

A : அவன் சொல்வதைக் கேள்! இத்தகைய வார்த்தைகள் அரசின் மீது இத்தகைய அவதூறுகள் ஒரு புனிதரைக்கூட சினத்துள் தள்ளும்.

B : கிரேயோனுமல்ல உனது எதிரி நீயேதான்.

இங்கு A, B எனும் பாத்திரங்கள் முறையே
(1) கோரஸ், ஈடிப்பஸ் (2) கிரேயோன், ஜொகஸ்ரா (3) குரு, ஈடிப்பஸ்
(4) ஈடிப்பஸ், தேய்ரீசியஸ் (5) ஈடிப்பஸ், ஜொகஸ்ரா (......)

17. இராவணேசன் நாடகத்தில் முரண் ஆரம்பிக்கும் இடம்
(1) இராவணன் வரவு
(2) அங்கதன் தூது
(3) இராமன் - இராவணன் போர்
(4) இந்திரஜித் - இலக்குமண சந்திப்பு
(5) இராமன் - கும்பகர்ணன் போர் (......)

18. நடிகர் ஒருவர் தனது உரையை பார்ப்போரை நோக்கிப் பேசுவது.
(1) தன்னுரை எனப்படும்.
(2) அகமொழி எனப்படும்.
(3) தனிமொழி எனப்படும்.
(4) அசரீரி எனப்படும்.
(5) ஆகாயக்கிளர்த்தல் எனப்படும். (......)

19. இராவணேசன் நாடகத்தில் "போரை என்றும் ஏற்போம் - எங்கள் புருஷர் பிள்ளைகள் போரில் மடிவது பார்க்கோம்" என்ற கூற்றிற்குரிய பாத்திரம்
(1) இராமன்
(2) சீதை
(3) மண்டோதரி
(4) சூர்ப்பனகை
(5) அங்கதன் (......)

20. எண்வகை சாத்வீக பாவங்களில் 'மயிர்க் கூச்செறிதல்' என்பதைக் குறிப்பது
(1) ஸ்வரபங்க
(2) அஸ்ர
(3) பிரளய
(4) ரோமாஞ்ச
(5) ஸ்தம்ப (......)

21. மேல்வருவனவற்றுள் கலை தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) பிரதியீடு இல்லாதது.
(2) அழகியல் தன்மை கொண்டது.
(3) மீளுருவாக்கம் செய்ய முடியாதது.
(4) பயனை முதன்மையாகக் கொண்டது.
(5) படைப்பாக்கத்துடன் தொடர்புபட்டது. (......)

22. 'சமூகத்தின் தூண்கள்' எனும் நாடகத்தை எழுதியவர்
(1) இப்சன்
(2) செக்கோவ்
(3) மோலியர்
(4) ரசீன்
(5) ஹென்றி பெக் (......)

23. மேல்வருவனவற்றுள் ஸ்தானிஸ்லாவ்ஸ்கி முன்வைத்த பயிற்சியளிக்கும் நுட்பமுறைகள் **அல்லாதவை**
(1) தரப்படும் சூழல், தளர்வு நிலை
(2) தொடர்பு கொள்ளல், பகுதிப்பணிகள்
(3) கதை முன்வைத்தல், உற்றுக் கவனித்தல்
(4) கற்பனைப் பாவனை நிலை, கற்பனை செய்தல்
(5) தசைகளின் தளர்வு நிலை, உண்மையும் நம்பிக்கையும் (......)

24. மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக.
அ - ஜேர்மனியில் பிறந்தவர்.
ஆ - 'பறை ஒலி' எனும் நாடகத்தை எழுதியவர்.
இ - நன்கமைந்த நாடகப் பண்பைக் கையாண்டவர்.
ஈ - தனிப்பட்ட பாத்திரங்களில் கவனம் செலுத்தியவர்.
உ - பாடல்களை நாடகத் தன்மைக்கேற்ப பயன்படுத்தியவர்.
இவற்றுள் அரங்கவியலாளர் பெட்டோல்ட் பிரெக்ட் பற்றிய கூற்றுக்கள் யாவை?
(1) அ, ஆ, இ
(2) அ, ஆ, ஈ
(3) அ, ஆ, உ
(4) ஆ, ஈ, உ
(5) இ, ஈ, உ (......)

25. மேல்வருவனவற்றுள் குரொட்டவ்ஸ்கியின் அரங்கு
(1) வறுமை அரங்கு
(2) சூழலியல் அரங்கு
(3) விவாதக்கள அரங்கு
(4) காவிய அரங்கு
(5) குரூர அரங்கு (......)

26. ஒத்தெல்லோ, கலி, ஷைலொக் போன்ற பிரதான பாத்திரங்களில் நடித்துப் புகழ்பெற்றவர்
(1) கலையரசு சொர்ணலிங்கம்
(2) பேக்மன் ஜெயராஜா
(3) பிரான்சிஸ் ஜெனம்
(4) S. T. அரசு
(5) திரவியம் இராமச்சந்திரன் (......)

27. 'தென்னவன் பிரம்ம ராஜன்' எனும் நாடகத்தை எழுதியவர்
(1) சொக்கன் (2) உடையபாலன் (3) தேவன்
(4) A. T. பொன்னுத்துரை (5) முல்லைமணி (......)

28. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் 'நாடகத்திரட்டு' எனும் நூலின் பதிப்பாசிரியர்
(1) கா. சிவத்தம்பி (2) மு. அம்மன்கிளி (3) க. கணபதிப்பிள்ளை
(4) பராக்கிரம நிரியல்ல (5) சோ. பத்மநாதன் (......)

29. சி. தில்லைநாதன் அவர்களால் எழுதப்பட்ட நாடகம்
(1) குரங்குகள் (2) மாணிக்கம் என்பது புல்லிலே (3) ஐயா இலெக்சன் கேட்கிறார்
(4) அந்துவந்து (5) இரட்டை வேடம் (......)

30. மேல்வருவனவற்றுள் நடிகர் ஒன்றியம் தொடர்பான **தவறான** கூற்று யாது?
(1) 'அரங்கு' எனும் சஞ்சிகையை வெளியிட்டது.
(2) 1970 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது.
(3) சங்காரம் நாடகத்தினை சி. மௌனகுரு நெறியாள்கை செய்தார்.
(4) அபசுரம், விழிப்பு போன்ற நாடகங்களை நா. சுந்தரலிங்கம் நெறியாள்கை செய்தார்.
(5) பெரும்பாலான நெறியாளர்கள் ஐரோப்பிய பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொண்டவர்களாவர். (......)

31. திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநராக இருந்தவர்
(1) ஏ. ஜெ. கனகரட்ன (2) மரிய சேவியர் அடிகளார் (3) பேர்மன் ஜெயராசா
(4) பாலதாஸ் அண்ணாவியார் (5) சாம் பிரதீபன் (......)

32. 'வெசமுனி' எனும் பேய்ப்பாத்திரம் இடம்பெறும் சிங்களச் சடங்கு
(1) தொவில் (2) ரட்டயக்கும (3) சன்னியக்கும
(4) கோலம் (5) சொக்கரி (......)

33. சிங்கள ரட்டயக்கும சடங்கின் பிரதான நோக்கம்
(1) சுகப்பிரசவம் (2) பிசாசு விரட்டுதல் (3) மழை வேண்டுதல்
(4) நாட்டுக்கு நன்மை (5) மக்களை மகிழ்வித்தல் (......)

34. ஈழத்தில் அரங்கிற்காக 'ஆற்றுகை' எனும் சஞ்சிகையையும் கலைக்காக 'கலைமுகம்' எனும் சஞ்சிகையையும் வெளியிடுவோர்
(1) விடியல் குழுவினர் (2) பரணி அச்சகத்தார்
(3) திருமறைக் கலாமன்றத்தினர் (4) நாடக அரங்கக் கல்லூரியினர்
(5) தியேட்டர் ஷாப் குழுவினர் (......)

35. இலங்கையின் கரையோரப் பகுதியில் ஆடப்பெறும் சிங்களச் சடங்கு அரங்கு
(1) சொக்கரி (2) கோலம் (3) நாடகம
(4) நூர்த்தி (5) மின்ஹா (......)

36. யப்பானிய நடிப்பு முறைமையில் குறியீட்டுப்பாங்கு, வாள் கொண்ட மோதற்குரியது
(1) அரகொட்டோ (Aragoto) (2) மை (Mie) (3) மிச்சியுக்கி (Michiyoki)
(4) சிற்றே (Shite) (5) வக்கி (Waki) (......)

37. மேல்வருவனவற்றுள் சொக்கரி பற்றிய **தவறான** கூற்று யாது?
(1) பத்தினித் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது.
(2) செழிப்பு, சௌபாக்கியம் வேண்டி நிகழ்த்தப்படும்.
(3) இலங்கையின் நாற்றட்டுப் பிரதேசத்தில் ஆடப்படும்.
(4) ஆண்டிகுரு, பச்சிரா, வைத்தியர் போன்ற பாத்திரங்களைக் கொண்டது.
(5) 'கின்னரய' எனும் பாய் இழைக்கும் சமூகத்தினரால் நிகழ்த்தப்படும். (......)

**38.** ஜப்பானிய கபுகி (KA BU KI) என்பதன் பொருள் முறையே
(1) நடிப்பு, பாடல், விளையாட்டு
(2) ஆடல், பாடல், நடிப்பு
(3) மாந்திரீகம், மெய்வல்லமை, விநோதம்
(4) விசித்திரம், விளையாட்டு, மாயாஜாலம்
(5) பாடல், உரையாடல், விநோதம்
(......)

**39.** சீன நாடக மரபில் 'புலமையாளர்கள்' ஏற்கும் பாத்திரங்கள் அணியும் ஆடைகளின் நிறம்
(1) சிவப்பு
(2) பச்சை
(3) ஊதா
(4) நீலம்
(5) மஞ்சள்
(......)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் எழுதப்பட்ட நாடகம் யாது?



(1) புழுவைப் பருமாசி
(2) சர்பாதி
(3) மயில்
(4) மேற்பூச்சு
(5) கோடை
(......)

❀❀

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

විෂය අංකය / பாட இலக்கம்: **58**
විෂයය / பாடம்: **நாடகமும் அரங்கியலும் II**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்

I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 4 | 31. | 2 |
| 02. | 4 | 12. | 4 | 22. | 1 | 32. | 1 |
| 03. | 3 | 13. | 3 | 23. | 3 | 33. | 1 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 3 | 34. | 3 |
| 05. | 1 | 15. | 1 | 25. | 1 | 35. | 2 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 1 | 36. | 4 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 3 | 37. | 3 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 1 | 38. | 2 |
| 09. | 3 | 19. | 3 | 29. | 2 | 39. | 3 |
| 10. | ............ | 20. | ............ | 30. | ............ | 40. | ............ |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

* உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

1. "சோபோக்கிளிஸ் எழுதிய நாடகங்களுள் சிறந்த அவலச்சுவை நாடகமாக 'ஈடிப்பஸ் மன்னன்' என்ற நாடகத்தைக் குறிப்பிடலாம்."
   (i) 'ஈடிப்பஸ் மன்னன்' என்ற நாடகத்தின் கரு, மோதுகை என்பவற்றைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)
   (ii) இந்நாடகத்தில் வரும் செயற்றிலைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு, அச்செயற்றிலைகளில் காணப்படும் **இரண்டு** பாத்திரங்களின் குணவியல்புகளை விளக்குக. (10 புள்ளிகள்)

2. (i) கோடை நாடக எழுத்துருவின் மூலக்கூறுகளைத் தருக. (05 புள்ளிகள்)
   (ii) நாடக எழுத்துருவில் மோதுகைகள் இடம்பெறும் சந்தர்ப்பங்கள் **மூன்றினை** விளக்குக. (05 புள்ளிகள்)
   (iii) மாணிக்கம், பசுபதர், செல்லம் போன்ற பாத்திரங்களின் இயல்புகளை விளக்குக. (05 புள்ளிகள்)

3. (i) வில்லியம் சேக்ஸ்பியர் உலகளாவியரீதியில் போற்றப்படுவதற்கான காரணங்கள் **ஐந்து** தருக. (05 புள்ளிகள்)
   (ii) "சேக்ஸ்பியரின் நாடக ஆக்க முறைமை தனித்துவமானது." விவரிக்குக. (05 புள்ளிகள்)
   (iii) இவரது 'கிங் லியர்' நாடகத்தில் வரும் 'லியர்' பாத்திரம் எத்தகைய வீழ்ச்சியைக் கொண்டது என்பதை விளக்குக. (05 புள்ளிகள்)

### உபபகுதி B

4. இராவணேசன் நாடகத்தில் மோதுகை வெளிப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி, இராவணன் பாத்திரம் எவ்விதம் படிப்படியாக வளர்த்தெடுக்கப்படுகிறது என்பதை நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

5. "1980 களில் ஈழத்துத் தமிழ் நாடக அரங்க வளர்ச்சி உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது." அக்கால அரசியல் சூழ்நிலை, அரங்குசார் நோக்கங்கள், செயற்பாடுகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு மேற்குறித்த கூற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
   (i) கூத்தின் மரபும் நவீனமும்
   (ii) சமகால அரசியல் அரங்கு
   (iii) பாடமே அரங்காகும் அரங்குமுறைமை
   (iv) வர்க்க, பால் முரண்பாடு நிலைப்பட்ட அரங்க முறைமை
   (v) இலங்கையின் இயல்பு நெறி சித்திரிப்பு அரங்க முறைமை (5 × 3 = 15 புள்ளிகள்)

பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களையும்
பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து,
எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி II
## பிரிவு A

**01. "சோபோகிலிஸ் எழுதிய நாடகங்களுள் சிறந்த அவலச்சுவை நாடகமாக 'ஈடிப்பஸ் மன்னன்' என்ற நாடகத்தைக் குறிப்பிடலாம்"**

i. **'ஈடிப்பஸ் மன்னன்' என்ற நாடகத்தின் கரு, மோதுகை என்பவற்றைக் குறிப்பிடுக.**

- கரு
  - விதியின் பிடியிலிருந்து எவருமே தப்பித்துக் கொள்ள முடியாது.
  - உண்மையும் குருட்டுத் தனமும்

  (பொருத்தமான யாதாயினும் ஒரு கருவை குறிப்பிட்டால் போதுமானது)

- மோதுகை

  தனி மனிதருக்கும் இறை நியதிக்கும் இடையிலான போராட்டம்

மேற்படி விடயங்களை மையப்படுத்தி முன்வைக்கப்படும் விடைகளைப் பரிசீலித்துப் புள்ளி வழங்குக.

**(05 புள்ளிகள்)**

ii. **இந்நாடகத்தில் வரும் செயல்நிலைகள் மூன்றினைக் குறிப்பிட்டு, அச் செயல்நிலைகளில் காணப்படும் இரண்டு பாத்திரங்களின் குணவியல்புகளை விளக்குக.**

- ஈடிப்பஸ் கொலையாளியினைத் தேடுவதை யொகஸ்ரா தடுத்தல்.
- ஈடிப்பஸ் தைரிசீயஸ் கூறியவற்றை மறுதலித்தல்.
- ஈடிப்பஸ் கிறியோன் மீது குற்றங்களைச் சுமத்துதல்.

இவை போன்ற பொருத்தமான மூன்று செயல்நிலைகளைக் குறிப்பிட்டிருந்தால் 3 புள்ளிகள் வழங்க முடியும்.

7 புள்ளிகள்

வழங்க முடியும்.

உதாரணம் : ஈடிப்பஸ், ஜொகஸ்ரா

ஈடிப்பஸ், கிறியோன் **(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**02.**

i. **கோடை நாடக எழுத்துருவின் மூலக்கூறுகளைத் தருக.**

- கரு
- கதை
- மோதுகை
- பாத்திரங்கள்
- கதைப்பின்னல்
- மேடைக்குறிப்புகள்
- துணைக்கலைகள்
- சொல்லாடல்கள்

இவற்றுள் யாதாயினும் ஐந்தினைக் குறிப்பிட்டு இவை கோடை நாடகத்தில் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளதென குறிப்பிட்டிருந்தால் முழுப் புள்ளிகளை வழங்கலாம்.

**(05 புள்ளிகள்)**

ii. **நாடக எழுத்துருவில் மோதுகைகள் இடம்பெறும் சந்தர்ப்பங்கள் மூன்றினை விளக்குக.**

- கணேசு தவில் பழகுவதை செல்லம் தடுத்தல்.
- கமலியை முருகப்புவிற்கு திருமணம் செய்து வைக்க செல்லம் முயற்சித்தல்.
- தவிலைத் தவிர்த்து மேலைத்தேய வாத்தியத்தை பயன்படுத்த முடிவெடுத்தல்.

இவை போன்ற மோதுகைகள் மேற்கிளம்பும் சந்தர்ப்பங்களை விளக்கியிருப்பின் முழுப் புள்ளிகளை வழங்கலாம். **(05 புள்ளிகள்)**

iii. **மாணிக்கம், பஞ்சையர், செல்லம் போன்ற பாத்திரங்களின் இயல்புகளை விளக்குக.**

**மாணிக்கம்**

- நாதஸ்வரக் கலையை உயிராக மதிப்பவர்
- சமூகம் பற்றிய ஆழ்ந்த பார்வை கொண்டவர்.
- நிதானமும் பொறுமையும் உடையவர்
- இறைபக்தி உள்ளவர்
- கலை ஆர்வம் உள்ளவர்

**பஞ்சையர்**

- நாதஸ்வர இசையில் ஈர்ப்புடையவர்.
- கோவில்கள் பொலிவிழந்து போனதை எண்ணி வருந்துபவர்.
- எப் பிரச்சினையையும் சலனமின்றிக் கையாள்பவர்.
- சாதிப் பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டவர்.
- மனித நேயம் மிக்கவர்.
- மற்றவரின் ஏழ்மை கண்டு வருந்துபவர்.

**செல்லம்**

- ஆங்கிலக் கல்வி மோகம் கொண்டவர்
- அரச உத்தியோக ஆசை கொண்டவர்.
- மகளுக்கு அரச உத்தியோக மாப்பிள்ளையைத் திருமணம் செய்ய எண்ணுபவர்.
- கணவன் வருமானத்தில் வாழ்ந்தாலும் அவரது கலையில் ஆர்வம் காட்டாதவர்.
- விருந்தினரை வரவேற்பவர்.
- தனக்குப் பிடிக்காததை முகத்துக்கு முன்னால் கூறுபவர்.
- மூட நம்பிக்கைகளில் நம்பிக்கை கொண்டவர்.

இவை போன்ற பண்புகள் விளக்கப்பட்டிருத்தல் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**03.**

i. **வில்லியம் சேக்ஸ்பியர் உலகளாவிய ரீதியில் போற்றப்படுவதற்கான காரணங்கள் ஐந்து தருக.**

- அவலச்சுவை, மகிழ்நெறி, வரலாற்று நாடகங்கள் என்பவற்றை இன்னொரு தளத்திற்கு வளர்த்தெடுத்தார்.
- அரங்கின் பல்வேறு தளங்களும் காட்சி மாற்றத்திற்கு பயன்படுத்தப்பட்டமை.
- பாத்திரங்களின் பன்முகப்பட்ட பண்பினை சிறந்த மோதுகைப் பண்புடன் வெளிப்படுத்தல்.
- சொல்லாடலுக்குப் பின்னால் செயல் இயக்கம் மேல் கிளம்பி நிற்கும்.
- மொழியே அரங்கு, மொழியின் முழு வீரியத்தினையும் அரங்க மொழியாக்கினார்.
  உவமானம், உவமேயம், தன்னுரை, தனிமொழி, புறச்சொல் என்பவற்றை அறிந்து படைத்தல்.
- வெற்றுக் கவிதை ஆக்க முறைமை.

**(05 புள்ளிகள்)**

ii. **“சேக்ஸ்பியரின் நாடக ஆக்க முறைமை தனித்துவமானது” விவரிக்குக.**

- பாத்திர ஆளுமை
- உலகப் பொதுமையான கரு
- பாத்திர மோதுகை
- பிரதான எதிர்ப்பாத்திரங்கள், சம்பவங்கள், வளர்த்தெடுக்கப்படும் முறைமை.
- கதைப்பின்னலின் வளர்ச்சி நிலை

எடுத்துக்காட்டு உதாரணங்கள் மூலம் எழுத்துருவாக்க முறைமையினை விளக்கம் தருவது எதிர்பார்க்கப் பெறுகின்றது. **(05 புள்ளிகள்)**

iii. **இவரது ‘கிங் லியர்’ நாடகத்தில் வரும் ‘லியர்’ பாத்திரம் எத்தகைய வீச்சுக் கொண்டது என்பதை விளக்குக.**

- இந்நாடகத்தில் ஏனைய பாத்திரங்களை விட லியர் பாத்திரம் சிக்கல் நிறைந்ததாகும்.
- இப் பாத்திரத்தில் பரந்த கவர்ச்சியான இயக்கம், உணர்ச்சி, உளவியல் மாற்றம் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது.
- ஆரம்ப கட்டத்தில் லியர் பூரண அதிகார நிலையில் இருக்கின்றார்.
- சுயமாக ஆத்திரப்படக் கூடியவர், விருப்பங்களை திருப்திப்படுத்திக் கொள்ள வற்புறுத்துவார். இந்தக் குழந்தைத் தனமான நடத்தை நிறைவேற முடியாத போது தோற்கடிக்கப்படுகின்றார்.
- அடுத்த கட்டத்தில் இயலாமை காரணமாக சித்தப்பிரமை ஏற்படுகின்றது.
- உண்மையை உணரும் போது ஏமாற்றம் அடைகிறார்.

- உடல், உள, காண்பிய நிலைமாற்றங்கள்
  எடுத்துக்காட்டு உதாரணங்கள் மூலம் எழுத்துருவிலிருந்து விளக்கம் தருவது எதிர்பார்க்கப் பெறுகின்றது.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

## பிரிவு B

**04. இராவணேசன் நாடகத்தில் மோதுகை வெளிப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி, இராவணன் பாத்திரம் எவ்விதம் படிப்படியாக வளர்த்தெடுக்கப்படுகின்றது என்பதை நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

- நாடகத் தொடக்கத்திலேயே மோதுகை ஆரம்பமாகிறது. அதாவது அங்கதன் இராவணனுடன் உரையாடி “கேளடா இராவணா! சீதையை சிறை விட்டு எங்கள் இராமனின் கால்களைத் தொழுது வாழ்” என்ற வார்த்தைகள் இராவணனை சினங் கொள்ளச் செய்வதுடன் மோதுகை ஆரம்பமாகிறது.

- இராவணன் – இராமன் யுத்தம்
  கும்பகர்ணன் – இராவணன் தர்க்கம்
  கும்பகர்ணன் – இராமன் போர்
  இந்திரஜித் – இலக்குமணன் போர்
  இராவணன் – இந்திரஜித் உரையாடல்
  இராமன் – இராவணன் போர்

  என்றவாறு வளர்ந்து இராவணன் இறப்புடன் நிறைவு பெறுகின்றது.

- இராவணன் வீரத்திற்காக இலங்கையின் வீழ்ச்சியை ஏற்றல். வீரம், தன்மானம் என்ற குணாம்சங்களை மையப்படுத்தி இராவணன் பாத்திரம் வளர்த்தெடுக்கப்படுகின்ற முறைமை. இது அங்கதன் தூதிலே நாடகத்திற்கான முரண்பாடு வளர்த்தெடுக்கப்பட்டு “துன்றிடும் பெண்ணை விட்டு தொழுது வாழ்” என்ற அங்கதனின் கூற்று இராவணனைத் தாக்கிப் பல முரண்பாடுகளுக்குள் தள்ளி தன்மானத்திற்காகப் போராடும் ஓர் வீரப் பாத்திரமாக பல வழிகளில் வளர்த்தெடுக்கப்படுகின்றது. இதில் இராமன் போர் தொடுத்தல், அதில் இராவணன் தோன்றல், இராமன் “இன்று போய் நாளை வா” என அனுப்புதல், மீண்டும் அவ்வார்த்தை அவனை முரண்பட வைக்கிறது. பின்னர் தம்பிமாரான கும்பகர்ணன், சிங்கன், சீலன், மகரன், குருதிக் கண்ணன் போன்ற மாபெரும் வீரர்களையும் அனுப்பி அவர்களையும் இழக்கிறான்.

- இறுதியில் தன் மகன் இந்திரஜித்தை அனுப்பி அவனையும் இழக்கிறான். முடிவில் மண்டோதரி தடுத்தபோதும் தன் தோல்வியும், மரணமும் நிச்சயம் என்று தெரிந்து “இன்றுளார் நாளை மாழ்வார் புகழுக்கும் இறுதி உண்டோ! என்று தனக்குள் தான் முரண்பட்டு, மண்டோதரி தடுத்து சீதையை விடுமாறு

தன் பின்னர்

  வேண்டுமானால் சீதையை விடுகிறேன் என்று கூறி இராவணன் போராடி மடிகின்ற வரை இராவணன் என்ற பாத்திரத்தின் வளர்ச்சிப் படிநிலையை விளக்குவர்.

**(15 புள்ளிகள்)**

05. "1980 களில் ஈழத்துத் தமிழ் நாடக அரங்க வளர்ச்சி உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது" அன்றைய அரசியற் சூழ்நிலை, அரங்குசார் நோக்கங்கள், செயற்பாடுகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு மேற்குறித்த கூற்றை விளக்குக.

**அரசியல் சூழ்நிலையாக**

1. கூர்மையடைந்து சென்ற இன முரண்பாட்டுச் சூழல்
2. யுத்த முனைப்பின் கூர்மை
3. யுத்த இழப்புகளின் அதிகரிப்பு
4. பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டம் கட்டுப்படுத்தப் பெற்றமை.
5. இடப்பெயர்வுகள்.

என்பனவற்றை இனங்கண்டு, அந்நிலைமைகளின் விளைவாக உருவான புதிய அரசியற் தேவைப்பாடுகளை அடையாளப்படுத்த வேண்டும்.

**அரங்கு சார் நோக்கங்கங்களாக**

1. அரசியல் விழிப்பூட்டல்
2. அரசியல் அணி திரட்டல்
3. மக்களை நாடி அரங்கைக் கொண்டு செல்லல்.
4. அக்காலச் சூழலுக்கு ஏற்ப நாடக எழுத்துருக்களை உருவாக்குதல்.
5. கல்விசார் எதிர்பார்ப்புக்களை அடைதல்.
6. சிறுவர்களின் ஆளுமை விருத்தி
7. பால்நிலைச் சமத்துவம் பற்றிய விழிப்பூட்டல்.

என்ற வகையிலான நோக்கங்களை அடையாளம் காணுதல் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

**அரங்கு சார் செயற்பாடுகளாக**

1. படச்சட்ட அரங்கை முழுமையாகப் பயன்படுத்தல்.
   உதாரணம் : மண் சுமந்த மேனியர்
2. மாயமான் போன்ற வீதி நாடகச் செயற்பாடுகள்
3. பாடசாலை அரங்கச் செயற்பாடுகள்
4. சிறுவர் நாடகத் தயாரிப்புக்கள்
5. நாடகப் பட்டறைகள்

என்பவற்றின் அடிப்படையில் முனைப்புறுத்தப்பெற்ற ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு உச்ச வளர்ச்சியை நோக்கிச் சென்றமை பற்றிக் குறிப்பிடுதல் வேண்டும்.

**(15 புள்ளிகள்)**

## 06. மேல்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக

### i. கூத்தின் மரபும் நவீனமும்

- கூத்தின் மரபு வழித் தன்மை மற்றும் நவீனமயமாக்கல் தொடர்பில் பின்வரும் விடயங்களை முதன்மைப் படுத்தி விளக்கியிருத்தல்.
  1. ஆற்றுகை முறைமை
  2. அரங்க வெளி
  3. ஆற்றுகைக் காலம்
  4. சபையோர் / இசைஞர்
  5. பார்ப்போர்

  மேற்படி விடயங்களுடன் தொடர்புடையோரையும் தொடர்புடைய ஆற்றுகைப் படைப்புக்களையும் உதாரணங்களுடன் விளக்கியிருத்தல்.

**(05 புள்ளிகள்)**

### ii. சமகால அரசியல் அரங்கு

- 80 களின் பின்னரான அரங்க நிலைமைகள் – அரசியல் தொடர்பானவை
- 90 களின் பின்னரான அரங்க நிலைமைகள் – மக்களை நாடிச் செல்லும் அரங்கு
- 2000 இன் பின்னரான அரங்கு – தளை நீக்கத்திற்கான அரங்கச் செயற்பாடுகள், பங்கு கொள்ளல், அரங்கச் செயற்பாடுகள்.

மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய வகையில் பொருத்தமாக விளக்கியிருத்தல்.

**(05 புள்ளிகள்)**

### iii. பாடலே அரங்காகும் அரங்க முறைமை

- பாடி நடித்தலும், நடித்துப் பாடுதலுமே இதன் அடிப்படை அம்சமாகும்.
- கதை, உணர்வு, காட்சிகள் அனைத்தும் பாடலுக்கூடாக வெளிப்படுத்தப்படுவது.
- அரங்கவெளி, ஆற்றுகை முறைமை, துணைக்கலைப் பயன்பாடு தொடர்பில் பொருத்தமாக விளக்கியிருத்தல்.

**(05 புள்ளிகள்)**



Past Papers Wiki - Download More Past Papers and Study Well!

**iv. வர்க்க, பால் முரண்பாடு நிலைப்பட்ட அரங்க முறைமை**

- இலங்கைத் தமிழரங்கில் 60 மற்றும் 70 களில் முனைப்புற்றிருந்த அரங்க முறைமைகள்
- தீண்டாமை தொடர்பானவை.
- தொழிலாளி, முதலாளி வர்க்க முரண்பாடு பற்றிப் பேசுவன.
- பால்நிலைச் சமத்துவம் தொடர்பானவை.

மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய அம்சங்களை விளக்கியிருப்பின்

**(05 புள்ளிகள்)**

**v. இலங்கையின் இயல்பு நெறிச் சித்திரிப்பு அரங்க முறைமை**

- பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் அரங்கச் செயற்பாடுகள் பிரதானமானவை.
- பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் இயல்புநெறிச் சித்திரிப்புக்கூடாக வெளிப்படுத்தப்படும் முறைமையை விளக்கியிருத்தல் விடையில் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

WWW.PastPapers.WIKI



Past Papers Wiki - Download More Past Papers and Study Well!